**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 128/2015 தேதி-01.08.2025

(P.W.1) – ஜார்ஜ் செல்வமணி

**குறுக்கு விசாரணை**

எ பட்டிகை சொத்தானது 5 சென்ட் சொத்து என்றால் சரிதான். எ பட்டிகை சொத்து இருக்கும் சர்வே நம்பரில் எனது 5 சென்ட் சொத்தை தவிர்த்து கிழக்கு பக்கம் மற்றும் தெற்கு பக்கம் பிரதிவாதிக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 2 ஏக்கருக்குமேல் இருக்கலாம். பிரதிவாதி அனைத்து சொத்துக்களையும் சேர்த்து வைத்திருந்தார், அதில் 5 சென்ட் சொத்தை எனக்கு தந்தார் என்றால் சரிதான். 24.05.1999 அன்று எனக்கு விலை எழுதிக்கொடுத்தார். பி பட்டிகை சொத்தை எனக்கு விலை கொடுப்பதற்கு முன்பாகவே பிரதிவாதி விலைக்கு வாங்கிவிட்டார். எனது பிராதில் பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதி எனது மனைவியின் சகோதரர் ஆவார். எனது பிராதில் எ பட்டிகை சொத்தின் முன்பாக இருக்கும் பி பட்டிகை சொத்தில் தக்கலை அழகியமண்டபம் ரோட்டில் 5 அடி அகலமுள்ள சொத்து என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுதிக்கொடுத்த விலையாதாரத்தில் எ சொத்திற்கு பி பட்டிகை சொத்தான 5 அடி அகலம் கொண்ட சொத்து என குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 1 சென்ட் என நான் கூறுவது எத்தனை அடி அகலம் மற்றும் எத்தனை அடி நீளம் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

எனக்கு விலை கொடுத்த பத்திரத்தில் சர்வே எண் 369/8 பியில் கொண்ட 1 சென்ட் சொத்தில் கூடியும் அதை தொடர்ந்து தபசி சொத்தில் கிழக்கு பக்கம் என்னுடைய தனது கிடப்பு சொத்தில் கூடியும் நீங்களும் வாரிசுகளும் இன்றுமுதல் நான் இதனால் கிரையம் தரும் தபசில் சொத்தில் வடக்கு பக்கமுள்ள மெயின் ரோட்டில் நின்றும் போக்குவரத்து செய்து கொள்வதுமாகும் எனக்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஆவணத்தில் எவ்வளவு அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளதோ அதேதான் விலை வாங்குபவர் அனுபவிக்க வேண்டுமென்றால் சரிதான்.

எனது பிராதில் எனது ஆவணத்திற்கு எதிராக 5 அடி அகலம் கொண்ட சொத்து என கூறியுள்ளேனா என்றால் சரிதான். எனக்கு அந்த சொத்து வழியாக எனது வீட்டிற்கு செல்வதற்குள்ள அவகாசம் மட்டுமே கோரமுடியும் 5 அடி அகலம் கொண்ட பாதை என கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் எனது ஆவண அவகாசத்திற்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ- 1 ஆவணத்தின்படி நான் கூறுவதுபோல் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

எ பட்டிகை சொத்தும் பி பட்டிகை சொத்தும் வேறுவேறு சர்வே எண்கள் உள்ளது என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தான 1 சென்ட் சொத்தை பிரதிவாதி வில்சன் என்பவரிடமிருந்து விலையாக வாங்கினார். நானும் அதற்கு பாதி விலை கொடுத்திருக்கிறேன். பி பட்டிகை சொத்தை கிரையம் வாங்கும்போது அதற்கான ஆவணத்தில் நான் விலை கொடுத்ததற்கு எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தை கிரையம் வாங்கியதற்கு நான் பாதி விலை கொடுத்ததை நிருபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பி பட்டிகை சொத்திற்கான ஆவணத்தை எவ்வளவு விலை கொடுத்து கிரையம் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது.

எவ்வளவு மதிப்பு காட்டி பதிவு செய்யப்பட்டது என்கிற விபரம் எனக்கு தெரியாது. அது எந்த ஆண்டு, மாதம், தேதி என்ற விபரம் தெரியுமா என்றால் 1999 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் தேதி ஞாபகமில்லை. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றாலும் பி பட்டிகை சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணத்தின்படி 5 அடி அகலம் கொண்ட பாதை சொத்து என அதைப்பார்த்தால் துலங்காது என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தின் சர்வே எண் அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ- 4 ஆவணத்தில் எ பட்டிகை மற்றும் பி பட்டிகை பாதை அவகாசம் குறிப்பிடப்பட்டு அது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் அசல் ஆவணங்களை வங்கியில் கடன் வாங்கியதற்காக காண்பிக்கப்படும் பதிவு செய்யப்பட்ட பத்திரம்தான் வா.சா.ஆ. 4 என்றால் சரிதான். வங்கியில் கடன் வீடு கட்டுவதற்காக வாங்கினேன். வங்கியில் வீடு கட்டுவதற்கான கட்டிட வரைபட அனுமதி காண்பித்தால்தான் கடன் வழங்குவார்கள் என்றால் சரிதான். கட்டிட

வரைபட அனுமதி பெறவேண்டுமென்றால் பாதை காண்பித்துதான் அனுமதி பெறவேண்டுமென்றால் சரிதான். அந்த பிளானில் 5 அடி அகலம் கொண்ட பாதையை காண்பித்து அனுமதி பெறவில்லை என்றால் சரிதான்.

எனது வீட்டின் முன்புள்ள காம்போண்ட் சுவர் நான் கட்டியதா என்றால் நான் கட்டவில்லை. அந்த காம்போண்ட் சுவரில் இருக்கும் கேட் யாரால் போடப்பட்டது என்றால் நான்தான் போட்டேன். கேட் போடுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி வாங்கினேனா என்றால் கேட் போடுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி பெற தேவையில்லை. ஒரு சொத்திற்கு காம்போண்ட் சுவர் கட்டி கேட் போடுவதற்கு பஞ்சாயத்திடமிருந்து அனுமதி பெற்றுதான் போடவேண்டுமென்று விதி உள்ளது என்றால் அந்த விதிபற்றி எனக்கு தெரியாது. காம்போண்ட் சுவர் நான்போடவில்லை. பிரதிவாதியிடம் கேட் போடுவதற்கு அனுமதி வாங்கினேனா என்றால் அவரிடம் அனுமதி வாங்க தேவையில்லை. மேற்படி கேட்டை அகற்றுவதற்கு பஞ்சாயத்திலோ, பிரதிவாதியிடமோ அனுமதி பெறாததால் அந்த கேட்டை அகற்றுவதற்கு பிரதிவாதிக்கு உரிமையிருக்கிறது என்றால் எனக்கு அவகாசம் உள்ளதால் பிரதிவாதி அகற்ற முடியாது.

கேட்டை தொட்டு வடக்கு பக்கமும் கிழக்கு பக்கமும் எ மற்றும் பி பட்டிகை சொத்து உள்ளது என்றால் சரிதான். எனக்கு விலை கொடுத்த சொத்து மற்றும் போக்குவரத்து அவகாசம் தவிர மற்ற இடத்தில் பிரதிவாதி காம்போண்ட் சுவர் கட்ட உரிமையுள்ளது என்றால் சரியல்ல. நான் வீடு கட்டுவதற்கு பதிவு செய்து கொடுத்த வா.சா.ஆ- 4 ஆவணத்தில் சொத்து விபரத்திலோ, எல்கையிலோ காம்போண்ட் சுவர் போடப்பட்டிருப்பதாகவோ கேட் போடப்பட்டிருப்பதாகவோ கூறவில்லை என்றால் நான் வங்கியில் கடன் வாங்கும்போது அதில் காம்போண்ட் சுவர் மற்றும் கேட் கிடையாது. எனது பிராதிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ மேற்படி விசயமான நான் வங்கியில் கடன் வாங்கும்போது அதில் காம்போண்ட் சுவர் மற்றும் கேட் கிடையாது என்கிற விபரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

பி பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் என்ன என்று எனது பிராதில் கூறியுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. பி பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் யாருடைய சொத்து இருக்கிறது என்றால் என்னுடைய சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் இருக்கிறது. எனது பிராதில் பி பட்டிகை சொத்தின் எல்கையில் தெற்கு

பக்கமாக பிரதிவாதியின் சொத்தை மறைத்து எனது சொத்தை மட்டும் காண்பித்திருக்கிறேன என்றால் சரிதான். நான் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் பொய்யாக பிராது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த ஆண்டில் எனக்கு இடையூறு செய்தார் என்றால் 2015 ஆம் ஆண்டு பாதையை அடைக்க வந்தார் அப்போது பிரச்சனை வந்தது. கேட் போட்டு பாதையை அடைத்தார் என்கிற விபரத்தை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

எனது சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் அதைப்பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆணையர் நியமிக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு ஆணையர் நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் வில்சன் என்பவரது சொத்து இருக்கிறது. ஆனால் எனது பிராதில் மேற்கு பக்க எல்கை ஜாண்எட்வர்ட் என்பவரின் சொத்து இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் உண்மை விபரம் தெரியக்கூடாது என்பதற்காக பொய்யாக எல்கையை காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருடைய சொத்தின் பயன்பாட்டிற்காக பெரிய கனரக வாகனம் வந்து போவதற்காக பி பட்டிகை 1 சென்ட் சொத்தை மேற்கு எல்கை வில்சனிடமிருந்து கிரையமாக வாங்கினார் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.